தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்
எண்.100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032.
தொலைபேசி: 044 – 22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

முன்னிலை : மு. மாலிக் பெரோஸ் கான், இ.ஆ.ப (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்
*******

ஆணை எண். 161/ந/2022
நாள். 30.10.2022

திரு.R.மயில்சாமி,
புதுவிளாங்குடி. – முறையீட்டு மனுதாரர்.

ஆணையாளர்,
திருமங்கலம் நகராட்சி. – எதிர் மனுதாரர்

மதுரை மாவட்டம், புதுவிளாங்குடி, செம்பருத்தி நகர், அய்யப்பன் தெரு, பிளாட் எண்.5 என்ற முகவரியில் வசிக்கும் திரு.R.மயில்சாமி, என்பவரின் 27.09.2022 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 28.09.2022 அன்று பெறப்பட்டு 161/ந/2022 என்ற எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் மனு கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்கண்டவாறு ஆணை வெளியிடப்படுகிறது.

## <u>ஆணை</u>

மதுரை மாவட்டம், புதுவிளாங்குடி, செம்பருத்தி நகர், அய்யப்பன் தெரு, பிளாட் எண்.5 என்ற முகவரியில் வசிக்கும் திரு.R.மயில்சாமி, என்பவர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திற்கு அனுப்பியுள்ள தனது புகார் மனுவில் கீழ்கண்ட புகார்களை தெரிவித்துள்ளார்:–

“மதுரை மாவட்டம், திருமங்கலம் நகராட்சிக்குட்பட்ட மறவன்குளம், ஒத்தச்சி ஊரணி – SF 21 ஏரியா பரப்பளவு 54.0 ஏர்ஸ் கோடு எண் – TM040–0–3–ல் இருப்பது ஊரணியாகும். இவ்வூரணி நிலத்தடிநீர் தேக்கி வைப்பதினால் திருமங்கலம் நகர்வாழ் மக்களுக்கு மிகவும் பயனுள்ளதாக இருந்து வந்த நிலையில் இவ்வூரணியை மண்கொட்டி மூடிவிட்டு, ஆக்கிரமிப்பு செய்து பேருந்து நிலையமாக கொண்டுவரப்பட்டது. பேருந்து நிலையத்தின் நான்கு புறமும் பல கடைகள் கட்டி ஏலம் விடப்பட்டுள்ளது. இக்கடைகளை கட்சிகாரர்கள் மற்றும் முக்கிய பிரமுகர் பெயரில் கடை எடுத்து உள்வாடகைக்கு பல லட்சம் ரூபாய் பணம் வாங்கி கொண்டு மூன்றாவது நபருக்கு உள்வாடகைக்கு விடபட்டு இருக்கிறது. இந்த முறைகேடுகள் திருமங்கலம் நகராட்சி ஆணையர் அவர்கள் கண்டுகொள்வது இல்லை. மேற்படி ஒத்தச்சி ஊரணி (குளம்) ஆக்கிரமிப்பு செய்து பேருந்து நிலையமாக மாற்றம் செய்தது சட்டவிரோதமாகும், நான் இதுகுறித்து புகார் மனு 15.09.2022 தேதியில் பதிவு தபாலில் ஆக்கிரமிப்புகளை அகற்ற கோரி இருந்தேன். குளம்

குட்டை, ஊரணி, ஓடை, கண்மாய் மற்றும் நீர்நிலைகளில் எந்தவொரு ஆக்கிரமிப்புகளும் ஏற்பட கூடாது என்று, தமிழக அரசாணை (நிலை) எண்.186 வருவாய் (நிமு 1 (2) துறை நாள் 29.04.2003 மற்றும் மாண்புமிகு சென்னை உயர்நீதி மன்றம் நீதி பேராணை எண் 13493/2021 தீர்புரை நாள் 04.04.2022 உத்தரவில் தெளிவாக கூறப்பட்டுள்ளது. நீர்நிலைகளை பாதுகாப்பது அரசின் கடமையாகும்.

மேலும் மாண்புமிகு தலைமை நீதி அரசர் அவர்கள் ஒரு உத்தரவில் ஆக்கிரமிப்பில் உள்ள கட்டிடம் தாஜ்மஹால் ஆனாலும் கட்டிடத்தை இடித்து அப்புறப்படுத்த வேண்டும் என கூறியுள்ளார். தற்போது பேருந்து நிலையம் நகரின் மைய பகுதியில் அமைந்து உள்ளதால் வெளியூர் செல்லும் (Mofussil bus) பேருந்துகள், பேருந்து நிலையத்திற்கு செல்லாமல் நெடுஞ்சாலையில் காவல்நிலையத்திற்கு முன்பாக பலபேருந்துகள் ஒரே நேரத்தில் வாகனத்தை நிறுத்தி பயணிகளை இறக்கிவிட்டும் ஏற்று கொள்ளவும் சுமார் 10 நிமிடம் முதல் 15 நிமிடம் வரை ஒவ்வொரு பேருந்தும் நின்று செல்வதால் கடும் போக்குவரத்து நெரிசல் ஏற்படுகிறது. இதனால் பள்ளிபேருந்து, கல்லூரி பேருந்து, ஆம்புலன்ஸ் வாகனங்கள் செல்லுவதற்கு தடை ஏற்படுகிறது. மேலும் கர்ப்பிணிப்பெண்கள், பள்ளி, கல்லூரி மாணவ மாணவியர்கள் மற்றும் முதியவர்கள் வரையிலும் சாலையை கடக்க முடியவில்லை. இதனால் அனைத்து பொது மக்களும் பெரிய அளவில் பாதிப்புக்கு உள்ளாகி வருகிறார்கள், இந்நிலையில் புதிய பேருந்து நிலையம் திருமங்கலம் நகருக்கு வெளியில் அமைய இருப்பதாக கேள்விப்பட்டேன்.

எது எப்படி இருந்தாலும் ஒத்தச்சி ஊரணி (குளம்) சர்வே எண்.21 ஆக்கிரமித்துள்ள பேருந்து நிலையத்தையும் மற்றும் கடைகளை இடித்து அப்புறப்படுத்தியும், கடைகளை உள்வாடகைக்கு பல லட்சம் வாங்கி கொண்டு கடைகள் நடத்தப்படுகிறது என்பது தெரிந்து இருந்தும் நடவடிக்கை எடுத்து கடை உரிமத்தை இரத்து செய்ய தவறிய திருமங்கலம் நகராட்சி ஆணையர்கள், முன்னாள், இந்நாள் அதிகாரிகள் மீதும் துறைரீதியான கடுமையான ஒழுங்கு நடவடிக்கை எடுத்தும், மேற்படி குளத்தை ஆக்கிரமித்து கட்டப்பட்டுள்ள சட்டவிரோத பேருந்து நிலையத்தை விரைவாக அகற்ற உத்தரவிட்டும் பழைய நிலைமைக்கு ஊரணியை கொண்டுவர மாண்புமிகு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் அவர்களை மிக பணிவுடன் வேண்டிக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

(2) மேற்கண்ட புகார் மனுவின் மீதான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் 06.10.2022 நாளிட்ட கடிதம் மூலம் திருமங்கலம் நகராட்சி ஆணையரிடம் கோரப்பட்டது.

திருமங்கலம் நகராட்சி ஆணையாளர் தனது 11.10.2022 நாளிட்ட அறிக்கையில் மனுதாரரின் குற்றச்சாட்டுகளுக்கு முறையே கீழ்கண்டவாறு விளக்கம் அளித்துள்ளார்.

1) புகார் மனுதாரர், மனுவில் கண்டுள்ள புகார் விபரங்கள் வேண்டுமென்றே கெட்ட எண்ணத்துடன், உண்மைக்கு புறம்பாகவும், பொது நன்மைக்கு விரோதமாகவும் கொடுக்கப்பட்ட நியாயமற்ற புகார் மனு என்பதைப் பணிவுடன் தெரிவிக்கப்படுகிறது.

2) புகார் மனுவில் கண்டுள்ள ஒத்தச்சியூரணி என்பது அரசு புறம்போக்கு பகுதியாக இருந்து, வருவாய் சட்டவிதிகளின்படி, திருமங்கலம் பேரூராட்சிக்கு உரிமை மாற்றம் செய்யப்பட்டு, பின்பு 1987–க்கு பின்பு திருமங்கலம் நகராட்சியின் உரிமையிலும், பராமரிப்பிலும் பாதுகாப்பு மற்றும் அனுபவத்திலும் இன்று வரை தொடர்ந்து இருந்து வருகிறது.

3) ஒத்தச்சியூரணி என்று குறிப்பிடப்படும் பகுதி அரசு புறம்போக்கு பழைய சர்வே எண்.21ல் பேருந்து நிலையம் எனப் பதிவு ஏற்பட்டு ஆணையாளர், திருமங்கலம் நகராட்சி என வருவாய் ஆவணங்களில் பதிவு ஏற்பட்டுள்ளது. தற்போது நகர சர்வே சமயம் நகர புல எண் 297 என பதிவு செய்யப்பட்டு 0.54.0 ஹெக்டேர்ஸ் விஸ்தீரணமுள்ள பகுதியாக பதிவாகியுள்ளது.

4) தற்போதைய டி.எஸ்.எண். 297 (பழைய சர்வே எண்.21) நினைவுக்கு எட்டிய காலம் தொட்டு, கடந்த 70 ஆண்டுகளுக்கும் மேலாக மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது போல ஊரணி என்ற நீர்நிலைப் பகுதியாகவோ அல்லது குளமாகவோ இருக்கவில்லை. அவ்வாறு நீர்நிலையாக இருந்து வந்ததற்கான எவ்வித ஆதாரமும் மனுதாரர் சமர்ப்பிக்கவில்லை.

5) திருமங்கலம் பேருந்து நிலையப் பகுதி பழைய சர்வே எண்.21, புதிய நகர ச.எண்.297 என்பது 0.54.0 ஹெக்டேர்ஸ் கொண்ட திருமங்கலம் நகராட்சியின் பிரதான நகராட்சி பேருந்து நிலையமாகும். அதில் மனுதாரர் தெரிவித்துள்ளதுபோல் எந்தக் காலத்திலும், நீர் நிறைந்த குளமாகவோ அல்லது ஊரணியாகவோ அல்லது உயர்நீதிமன்ற உத்தரவில் கண்டுள்ள நீர்நிலை ஆக்கிரமிப்பாகவோ இருந்ததில்லை.

6) ஒத்தச்சியூரணி என்பது திருமங்கலம் பேருந்து நிலையத்தின் பகுதிக்கு உள்ள வருவாய் பதிவேடு குறிப்பு தான். அதன் பெயரில் ஊரணி என்பது உள்ளதால் அது நீர்நிலை கொண்ட ஊரணி ஆகாது. ஏனெனில் ஊரணியின் அமைப்போ அல்லது அம்சமோ அல்லது ஆதாரமோ இருப்பதாக மனுதாரர் சமர்ப்பிக்காமல் சுமார் 70 வருடங்களுக்கும் மேலாக மண்மேடாக சர்க்கார் புறம்போக்காக பதிவு மாற்றமாகி (Classification) பேரூராட்சி மற்றும் நகராட்சி வசம் பேருந்து நிலைய பராமரிப்பிற்காக அரசால் உரிய சட்ட வழிகளின்படி ஒப்படைக்கப்பட்ட இடத்தினை நீர்நிலைப் பகுதி என்றோ நீர்நிலை ஆக்கிரமிப்பு என்றோ மனுதாரர் குறிப்பிடுவது சட்டவிரோதமாகும்.

7) மனுதாரர் உரிய விபரம் தெரிந்திருந்தும், உள்நோக்கத்துடன் சுயலாபம் கருதி ஊரணி என்ற நீர்நிலை அம்சமே இல்லாமல், அரசுக்குப் பாத்தியப்பட்ட சர்க்கார் புறம்போக்கில் கட்டப்பட்ட பேருந்து நிலையத்தை நீர்நிலை ஆக்கிரமிப்பாக கருதி புகார் செய்துள்ளது சட்ட விரோதமாகும்.

8) மனுதாரரின் புகாரில் உண்மையில்லை.

9) எதிர்மனுதாரரின் தரப்பில் புகார் மனுவில் கண்டுள்ள நகராட்சி பேருந்து நிலையம் உள்ள மறவன்குளம் ஒத்தச்சியூரணி பகுதியில் உள்ள நகராட்சி பேருந்து நிலையத்திற்கான வருவாய் ஆவண நகல்களாக கீழ்க்கண்ட ஆவணங்கள் சமர்ப்பிக்கப்படுகிறது.

- நகர புலப்படம் – நகல் (FMB)
- நகர சர்வே நிலப்பதிவேடு நகல் (Town SLR)
- டவுன் சர்வே ரிஜிஸ்டர்
- திருமங்கலம் பேரூராட்சி, கால பேருந்து நிலைய கட்டுமான ஆவணம்.
- திருமங்கலம் நகர மொத்த FMB

10) புகார் மனுவில் கண்டுள்ள புகார் மனுதாரரின் உள்நோக்கம், அவரது புகாரைப் பார்த்தாலே எளிதில் அறியலாம். புகார் மனுவில் தற்காலத்தில் மண்ணைக் கொட்டி ஊரணியை ஆக்கிரமிப்பு செய்து பேருந்து நிலையம் அமைந்துள்ளது போல் தெரிவித்துள்ள புகார் அப்பட்டமான பொய். சுமார் 70 வருடங்களுக்கும் மேலாக அரசுபுறம்போக்காக (Classification) ஆகியிருந்த இடம், உள்ளாட்சி அமைப்பு சட்டவிதிகளின்படி அந்த அமைப்புகளின் நிர்வாக நலன் மற்றும் பொது பயன்பாட்டிற்கு சட்டப்படி மாற்றப்பட்டுள்ளது என்பது தான் உண்மை.

மனுதாரர் மனுவில் கண்டுள்ள புகாரின்படி ஏலம் விடப்பட்ட கடைகள், ஏலம் எடுத்தவர்கள் முறைகேடாக பயன்படுத்தினால் நகராட்சி ஆணையர் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டு நகராட்சி சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்படும்.

மாண்புமிகு உயர்நீதிமன்ற உத்தரவின்படி, நீர்நிலை புறம்போக்குகளில் உள்ள சட்டவிரோத ஆக்கிரமிப்புகளை அகற்றத்தான் அறிவுறுத்தப்பட்டுள்ளது. ஆனால் புகார் மனுவில் கண்டுள்ள திருமங்கலம் பேருந்து நிலையம் உள்ள ஒத்தச்சியூரணி பகுதி நீர்நிலை ஆக்கிரமிப்பு இல்லை என்பது பணிவுடன் சமர்ப்பிக்கப்படுகிறது.

ஆகவே மேற்கண்ட காரணங்களின் அடிப்படையில் சமூகம் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம் மனுதாரரின் புகாரில் எவ்வித அடிப்படை ஆதாரமும் இல்லை என்ற நிலையில் தள்ளுபடி செய்து உரிய உத்தரவு பிறப்பிக்க வேண்டுமாய் பணிவுடன் பிரார்த்திக்கப்படுகிறது என தெரிவித்துள்ளார்.

(3) மனுதாரரும் மற்றும் திருமங்கலம் நகராட்சி ஆணையரும் 11.10.2022 அன்று நாகர்கோவில் முகாமில் நடைபெறும் விசாரணைக்கு ஆஜராகுமாறு 06.10.2022 தேதியிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

(4) மனுதாரர் திரு.மயில்சாமி, 11.10.2022 அன்று நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி பின்வரும் தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்:

“மதுரை மாவட்டம், திருமங்கலம் நகரின் மையப்பகுதியில் ஒத்தச்சி ஊரணியில் மண்ணைக் கொண்டு நிரப்பியும், ஊரணியை மூடியும் நகராட்சியால் 20 வருடங்களாக ஆக்கிரமிப்பு செய்து பேருந்து நிலையமாக மாற்றியுள்ளனர். அப்பேருந்து நிலையத்தின் நான்கு பக்கங்களிலும் நகராட்சியால் கடைகளைக் கட்டி, அதனை நகராட்சியால் ஏலம் விடப்பட்டுள்ளது. அக்கடைகளை ஏலம் எடுத்த பலர் அக்கடைகளை நகராட்சியின் ஆதரவுடன் உள்வாடகைக்கு விட்டுள்ளனர். அப்பேருந்து நிலையத்திற்கு வரும் பேருந்துகள், பேருந்து நிலையத்திற்கு வெளியே நிற்பதால் அங்கு கடும் போக்குவரத்து நெரிசல் உண்டாகிறது. எனவே, அங்கு புதிது புதிதாக கடைகள் பெருகி வருகின்றன.

எனவே, மேற்கண்ட ஊரணியில் மாநகராட்சியில் ஆக்கிரமிப்பு செய்து கட்டப்பட்ட பேருந்து நிலைய ஆக்கிரமிப்பை அகற்றிடவும், அங்குள்ள பேருந்து நிலையத்தில் அமைந்துள்ள கடைகளை உள்வாடகைக்கு விடப்பட்டுள்ளதை கண்டறிந்து நடவடிக்கை எடுத்திடவும் மேலும் புதிய கடைகள் அமைவதை தடுத்திடவும் ஆவன செய்திடுமாறு இம்முறைமன்ற நடுவத்தைக் கேட்டுக்கொள்கிறேன்” என தெரிவித்துள்ளார்.

(5) எதிர்மனுதாரான திருமங்கலம் நகராட்சி ஆணையாளர் திரு. பெர்பெற்றி டெரன்ஸ் லியோன், 11.10.2022 அன்று நடைபெற்ற நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்கண்டவாறு தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்:

“மனுதாரர் குறிப்பிட்டுள்ள ஒத்தச்சி ஊரணி அருகே கடந்த 1978 முன்பிருந்தே பஸ் நிலையம் அமைந்து செயல்பட்டு வருகிறது. மேற்கண்ட பஸ் நிலையம் ஒத்தச்சி ஊரிணியை ஆக்கிரமித்து கட்டப்பட்டுள்ளதா என்பதை கண்டறிய தகுந்த பதிவேடுகள் ஏதும் கிடைக்கப்பெறவில்லை. ஆட்சியர் அலுவலகத்திலும் பதிவேடுகளை தேடியெடுக்க தக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

மேலும் மேற்கண்ட பேருந்து நிலையத்தில் தற்போது 36 கடைகள் இயங்கி வருகின்றன. மனுதாரரின் புகாரையொட்டி மேற்கண்ட கடைகளில் உள் வாடகைக்கு விடப்பட்டுள்ளதா என்பதை கண்டறிந்து, உள் வாடகைக்கு விடப்பட்டிருந்தால், அதனை கண்டறிந்து உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை இம்முறை மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும் இந்நேர்வு தொடர்பாக எனது 6.10.2022 நாளிட்ட அறிக்கையில் கண்டுள்ள கண்டுள்ள விவரங்களையும் எனது மேல் வாக்குமூலமாக பதிவு செய்துகொள்ளும்படி இம்முறை மன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்” என தெரிவித்துள்ளார்.

(6) முறையீட்டு மனுதாரரின் புகார் மனு, வாக்குமூலம், திருமங்கலம் நகராட்சி ஆணையரின் விளக்க அறிக்கை, வாக்குமூலம் ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன.

மதுரை மாவட்டம், திருமங்கலம் நகராட்சியைச் சார்ந்த மனுதாரர் திரு.R.மயில்சாமி என்பவர் தனது முறையீட்டு மனுவில், திருமங்கலம் நகராட்சிக்குட்பட்ட 54.0 ஏர்ஸ் பரப்பளவு கொண்ட நீர்நிலையாக இருந்த ஒத்தச்சி ஊரணியை திருமங்கலம் நகராட்சியால் ஆக்கிரமிப்பு

செய்யப்பட்டு, பேருந்து நிலையமாக செயல்பட்டு வருகிறது என்றும், பேருந்து நிலையத்தில் சட்டவிரோதமாக கடைகள் உள்வாடகைக்கு விடப்பட்டு உள்ளதையும் புகாராக தெரிவித்து, பேருந்து நிலையம் மற்றும் கடைகளையும் ஆக்கிரமிப்பிலிருந்து அகற்றி, மீண்டும் ஊரணியாக செயல்படுவதற்கு உரிய நடவடிக்கை எடுக்கக் கோரியுள்ளார்.

மனுதாரர் புகாராக தெரிவிக்கும் ஒத்தச்சி ஊரணி என்கிற இடமானது பழைய சர்வே எண் 21, புதிய நகரபுல எண் 297, 0.54.0 ஏர்ஸ் பரப்பளவு கொண்ட அரசு புறம்போக்கு நிலமாக இருந்து, வருவாய் சட்ட விதிகளின்படி, திருமங்கலம் பேரூராட்சிக்கு உரிமை மாற்றம் செய்யப்பட்டு, பின்பு 1987 ஆம் ஆண்டில் திருமங்கலம் பேரூராட்சி நகராட்சியாக நிலை உயர்த்தப்பட்ட பின் நகராட்சியின் உரிமையிலும், பராமரிப்பிலும் இருந்து வருகிறது என்பது ஆவணங்களின் மூலம் அறிய வருகிறது.

மேலே தெரிவிக்கப்பட்டுள்ள சர்வே எண் 297, பரப்பளவு 0.54.0 ஏர்ஸ் பரப்பளவு கொண்ட இடத்தை "பேருந்து நிலையம்" என பதிவு செய்யப்பட்டு உள்ளது என்பதை நகர் புலப்படம், நகர சர்வே நிலப்பதிவேடு மற்றும் திருமங்கலம் பேரூராட்சி காலபேருந்து நிலைய கட்டுமான ஆவணம் ஆகியவற்றின் மூலம் தெரிய வருகிறது.

மனுதாரர் புகார் மனுவில் குறிப்பிட்டுள்ளபடி, நீர்நிலை கொண்ட குளமோ அல்லது ஊரணியாகவோ இருந்து அதனை ஆக்கிரமிப்பு செய்யப்பட்டதாக எவ்வித ஆவணத்திலும் பதியப்படவில்லை என்பதும் கடந்த 70 ஆண்டுகளுக்கு மேலாக பேருந்து நிலையமாக செயல்பட்டு வருகிறது என்பதும் நகராட்சி ஆணையரின் அறிக்கை மூலம் அறிய வருகிறது.

எனவே, மனுதாரரால் ஒத்தச்சி ஊரணி நீர்நிலையாக இருந்து, அதனை திருமங்கலம் நகராட்சியால் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டு பேருந்து நிலையமாக செயல்படுவதாக தெரிவிக்கும் புகாருக்கு உரிய ஆதார ஆவணங்கள் அளிக்கப்படாததால், திருமங்கலம் நகராட்சி ஆணையாளரின் அறிக்கையினை ஏற்று இம்மனு மீதான நடவடிக்கையை இத்துடன் முடித்து வைக்கலாம் என இம்முறைமன்றம் முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது.

மனுதாரர் தனது முறையீட்டு மனுவில் தெரிவித்துள்ளபடி, பேருந்து நிலையத்தில் உள்ள திருமங்கலம் நகராட்சிக்கு சொந்தமான கடைகள் முறையாக நகராட்சி மன்றத்தின் தீர்மானப்படி ஏலம் எடுத்தவர்களே கடைகளை பயன்படுத்துகிறார்களா என்பதும், முறைகேடாக உள்வாடகை விடப்பட்டுள்ளதா என்பதையும் திருமங்கலம் நகராட்சி ஆணையாளர் ஆய்வு செய்து, மேற்படி கடைகளில் முறைகேடாக உள்வாடகைக்கு விடப்பட்டிருந்தது தெரியவந்தால், தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920, பிரிவு 261–ன்படி, முறைகேடான முறையில் கடைகளை ஏலம் எடுத்தவர்களின் ஏல உரிமையை இரத்து செய்யும் நடவடிக்கையினை மேற்கொள்ளுமாறு திருமங்கலம் நகராட்சி ஆணையாளரை இம்முறைமன்ற நடுவம் அறிவுறுத்துகிறது. இதில் காலதாமதம் ஏற்படாமல் ஒரு மாதகாலத்திற்குள் இப்பணியை முடிக்க திருமங்கலம் நகராட்சி ஆணையருக்கு ஆணையிடப்படுகிறது. உள்வாடகைக்கு விடப்பட்டிருந்தால் விதிமுறைகளைப்

பின்பற்றி சட்டப்படியான நடவடிக்கை எடுக்கவும், நகராட்சிக்கு வருவாய் இழப்பீடு ஏற்படுத்தியவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கவும் நகராட்சி நிர்வாக இயக்குநர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

2022 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 30–ஆம் நாள் என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1) திரு.R.மயில்சாமி,
பிளாட் எண்.5, அய்யப்பன் தெரு,
செம்பருத்தி நகர், புதுவிளாங்குடி,
மதுரை – 18.

2) ஆணையாளர், திருமங்கலம் நகராட்சி,
மதுரை மாவட்டம் – 625 706.

3) நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம், நெ.75, சாந்தோம் மெயின் ரோடு,
ராஜா அண்ணாமலைபுரம், சென்னை – 28.

4) இணை இயக்குநர் /ஒருங்கிணைப்பு அலுவலர் (Nodal Officer)
நகராட்சி நிர்வாக இயக்குநரகம், நெ.75, சாந்தோம் மெயின் ரோடு,
ராஜா அண்ணாமலைபுரம், சென்னை – 28.

நகல்.
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்,
இகோ/உதிரிகள்

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

செயலாளர்

தமிழ்நாடு மாநில உள்ளாட்சி அமைப்புகள் முறை மன்ற நடுவம் சென்னை–600 032